| | |
|---|---|
| நம்மையும் நாட்டுமக்களையும் காப்போம் | தொற்றிலிருந்துதமிழகத்தைமீட்போம் |

செ.வெ.எண்: 6 நாள்:04.07.2021

# முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட பட்டாச்சாரியார்கள், அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்தனர்.

மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 7.5.2021 அன்று முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், ஏழை, எளிய மற்றும் நடுத்தர என அனைவரும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்.

கொரோனா நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பு மக்களுக்கும் அவர்களுக்கு ஏற்றவாறு நிவாரண உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துறை சார்ந்த உயர் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு போர்கால அடிப்படையில், முதலமைச்சராக பொறுப்பேற்ற நாள் முதல் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதன்படி, இரண்டு கட்டங்களாக **நிவாரண உதவித்தொகை, பால் விலை குறைப்பு,** மகளிர் மற்றும் திருநங்கைகளுக்கு, சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் **இலவசமாக பயணம்,** முதலமைச்சரின் விரிவான மருத்துவ **காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் கொரோனா நோய் சிகிச்சை** மற்றும் மாவட்டந்தோறும் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான மனுக்களைப் பெற்று, அம்மனுக்களின் மீது 100 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க **உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்,** நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்கு நிவாரண

**உதவித்தொகையுடன் மளிகை பொருட்கள்** போன்ற பல்வேறு நிவாரண திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நோய்த்தொற்று பரவல் காரணமாக ஊரடங்கு காலத்தில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையில் திருக்கோயில்களில் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படாததால் திருக்கோயில்களில் நிலையான மாதச் சம்பளமின்றி பணியாற்றி வரும் அர்ச்சகர்கள், பூசாரிகள் மற்றும் பட்டாச்சாரியர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் நிலையான மாதச் சம்பளமின்றி பணியாற்றி வரும் அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாச்சாரியார்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு கொரோனா கால நிவாரண உதவித்தொகை ரூ.4,000, 10 கிலோ அரிசி மற்றும் 15 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும் என அறிவித்தார்கள்.




**அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில் அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாச்சாரியார்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு கொரோனா கால நிவாரண உதவித்தொகை ரூ.4,000, 10 கிலோ அரிசி மற்றும் 15 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கி தொடங்கி வைத்தார்.**

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் (22.06.2021) அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் நிலையான மாதச் சம்பளமின்றி பணியாற்றி வரும் அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாச்சாரியார்கள் மற்றும் பணியாளர்கள்

ஆகியோர்களுக்கு கொரோனா கால நிவாரண உதவித்தொகை ரூ.4,000, 10 கிலோ அரிசி மற்றும் 15 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒருகால பூஜை திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி வட்டத்திற்குட்பட்ட கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டிணம் பகுதிகளில் 58 நபர்களும், பர்கூர் வட்டத்தில் 35 நபர்களும், போச்சம்பள்ளி பகுதியில் 16 நபர்களும், ஊத்தங்கரை பகுதியில் 41 நபர்களும், சூளகிரி பகுதியில் 36 நபர்களும், ஓசூர் பகுதியில் 45 நபர்களும், அஞ்செட்டி பகுதியில் 30 நபர்களும், தேன்கனிக்கோட்டை பகுதியில் 40 நபர்கள் என **மொத்தம் 301 நபர்களுக்கு கொரோனா கால நிவாரண உதவித்தொகையான தலா ரூ.4,000 என ரூ.12.04 இலட்சம் மற்றும் 16 வகையான மளிகைப் பொருட்கள்**



**(10 கிலோ அரிசி, எண்ணெய் 500 கிராம், சர்க்கரை 500 கிராம், ஆட்டா 500 கிராம், டீ தூள் 200 கிராம், துவரம் பருப்பு 500 கிராம், உளுத்தம் பருப்பு 500 கிராம், கடலை பருப்பு 500 கிராம், மிளகாய் தூள் 100 கிராம், புளி 200 கிராம், கடுகு 100 கிராம், வெந்தயம் 100 கிராம், மிளகு 100 கிராம், சீரகம் 100 கிராம், மஞ்சள் தூள் 100 கிராம் மற்றும் அப்பளம் 1 எண்ணம்) அடங்கிய தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளது.**

**கொரோனா நிவாரண உதவித்தொகை மற்றும் நிவாரணப் பொருட்கள் பெற்றுக்கொண்ட அகசிப்பள்ளி ஊராட்சி, கன்னம்பள்ளி அருள்மிகு வெங்கட்ரமண சுவாமி திருக்கோயில் அர்ச்சகர் திரு.பலராமன் அவர்கள் தெரிவித்ததாவது:**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,
கொரோனா நிவாரண உதவித் தொகை ரூ.4000 ரொக்கம் மற்றும் 16 வகையான மளிகைப் பொருட்களை பெற்றுக்கொண்ட, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், அகசிப்பள்ளி ஊராட்சி,
கண்ணம்பள்ளி அருள்மிகு வெங்கடரமணா சுவாமி திருக்கோயில் அர்ச்சகர் திரு.பலராமன் அவர்கள்.

நான் கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், அகசிப்பள்ளி ஊராட்சி, கன்னம்பள்ளி, அருள்மிகு வெங்கட்ரமண சுவாமி திருக்கோயிலில் அர்ச்சகராக பணியாற்றி வருகிறேன். கொரோனா ஊரடங்கு காலங்களில் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு கொரோனா நோய்த்தொற்றை கட்டுப்படுத்தும் விதமாக அனைத்து அனைத்து வழிபாட்டு தலங்களுக்கும் பக்தர்கள் வர தடை விதிக்கப்பட்டது. பக்தர்கள் கோவிலுக்கு வருகை தராத நிலையில், எங்களுக்கு தினசரி வருமானம் இல்லாமல் இருந்தது. எங்களுக்கு வேறு எந்த தொழிலுக்கும் செல்ல முடியாத நிலையில் எங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் நிலையான மாதச் சம்பளமின்றி பணியாற்றி வரும் பட்டாச்சாரியார்கள், அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் ஆகியோர்களுக்கு கொரோனா கால நிவாரண உதவித்தொகை ரூ.4,000, 10 கிலோ அரிசி உள்ளிட்ட 15 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும் என அறிவித்து, அவற்றை எங்களுக்கு வழங்கியது மகிழ்ச்சி அளிக்கின்றது. என்னைப் போன்று திருக்கோயில்களில் பணியாற்றி வரும் அனைவரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். எனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் குடும்பத்தின் சார்பாகவும் என்னை போன்ற அனைத்து அர்ச்சகர்கள் சார்பாகவும் அனைத்து தெய்வங்களின் ஆசீர்வாதங்களுடன் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

**கொரோனா நிவாரண உதவித்தொகை மற்றும் நிவாரணப் பொருட்கள் பெற்றுக்கொண்ட கிருஷ்ணகிரி, புதுப்பேட்டை அருள்மிகு நவநீத வேணுகோபால சுவாமி திருக்கோயில் பட்டாச்சாரியார் திரு.விஜய ராகவாச்சாரியார் அவர்கள் தெரிவித்ததாவது:**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,
கொரோனா நிவாரண உதவித் தொகை ரூ.4000 ரொக்கம் மற்றும் 16 வகையான மளிகைப் பொருட்களை பெற்றுக்கொண்ட, கிருஷ்ணகிரி புதுப்பேட்டை அருள்மிகு நவநீத வேணுகோபால சுவாமி திருக்கோயில், பட்டாச்சாரியார் திரு. விஜய ராகவாச்சாரியார் அவர்கள்.

நான் கிருஷ்ணகிரி மாவட்டம், புதுப்பேட்டை அருள்மிகு நவநீத வேணுகோபால சுவாமி திருக்கோயிலில் பட்டாச்சாரியாராக பணியாற்றி வருகிறேன். கொரோனா நோய்த்தொற்றை கட்டுப்படுத்த முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு, திருக்கோயில்களுக்கு பக்தர்கள் வர தடை விதிக்கப்பட்டு இருந்த போதிலும் திருக்கோயில்களில் உள்ள தெங்வங்களுக்கான கால பூஜைகளை நடத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். இது போன்ற கால கட்டத்திலும் எங்களை போன்ற அர்ச்சர்கள், பட்டாட்டாட்சியார்கள் திருக்கோயில்களில் சம்பளம் இன்றி பணியாற்றுவதை கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா கால நிவாரண உதவித்தொகை ரூ.4,000, 10 கிலோ அரிசி மற்றும் 15 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும் என அறிவித்து, அவற்றை வழங்கியதன் மூலம் எங்கள் குடும்பம் ஊரடங்கு காலத்திலும், சிரமமின்றி மகிழ்ச்சியாக வாழ வழிவகை செய்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் பூரண இறைஅருள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை எளியோர் நலன், மகளிர் நலன், முதியோர் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தற்போது நிலவி வரும் அசாதாரன சூழ்நிலையிலிருந்து பொதுமக்களை காத்திடவும், பாதுகாக்கவும் போர்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

**தொகுப்பு:**
**திரு.தே.ராம்குமார்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**கிருஷ்ணகிரி மாவட்டம்**

| | |
|---|---|
| **முககவசம் அணிவீர்** | **தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம்** |

PRO-KGI